
JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 15 | Issue: 12 | February 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

தேவன் வைத்திருக்கும் சகல நன்மைகளையும்
ஆசீர்வாதங்களையும் பெற்றிட நீ உன்

## இருதயத்தை கவனி



இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

# வாலிபர் உலகம்

## உள்ளே

04


10


16


24


இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**

நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

**Phone: 04639-353333 | Cell:9750955547**

E-mail: youth@jesusredeems.org

www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்




**எனக்கு அன்பான வாலிப மகனே(ளே)!**
**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

இந்த எழுப்புதலின் நாட்களில் உங்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்துவதைக் கண்டு தேவனை துதிக்கிறேன். இந்த எழுப்புதல் ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் நீங்கள்; **தீவிரம், துரிதம், முனைப்பு** என்ற மூன்று காரியங்களை மனதில் கொள்ள வேண்டும். காரணம் எழுப்புதல் ஆரம்பித்துவிட்டது; நாம் தான் அதைப் பரவச் செய்ய வேண்டும். எனவே, இந்த 2025ஆம் ஆண்டு தீவிரம் என்பது உங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆகவே உங்களுடைய முழு இருதயமும் எழுப்புதலை நோக்கியே, எழுப்புதலைச் சார்ந்தே இருப்பது அவசியம். அதனால் உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எழுப்புதலுக்கு நேராக ஓடிக்கொண்டிருக்கும் நீங்கள் Double careful ஆக இருக்க வேண்டும். காரணம்

**உங்கள் இருதயத்தை வழிவிலக செய்துவிட்டால்..... பாவத்தினால் கறைபடுத்திவிட்டால்..... தீட்டுப்படுத்தி விட்டால்.....**

உங்கள் இலக்கு, திசை மாறும் என்று சாத்தான் நன்கு அறிந்திருக்கிறபடியால், உங்களுடைய இருதயத்தைப் பாதிக்கக்கூடிய காரியத்தை அக்கினியாஸ்திரமாய் எய்யும்படி முயல்வான்.

''எல்லா காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.'' இதை ஞானியும் இராஜாவுமாகிய சாலொமோன் எழுதுகிறார். காரணம் இருதயத்தை காவல் செய்யாவிட்டால், திருடனாகிய சாத்தான் உட்புகுந்து நல்ல சிந்தனைகளையும், நல்ல ஒழுக்கங்களையும், நல்ல திறமைகளையும், நல்ல பரிசுத்த எண்ணங்களையும், நல்ல ஊழிய பாரத்தையும் திருடி, கெடுத்து, அழித்து பின்னர் உங்கள் இருதயத்திலிருந்து புறப்படுகிற ஜீவஊற்றைக் கெடுத்து அதைக் **கறைப்படுத்தி, மாசுப்படுத்தி, தீய எண்ணங்களால் நிரப்ப முற்படுவான்** என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## வாலிபர்களே கவனம்!!

தேவனுக்கு பிரியமான ஜெபம் செய்து அவரிடத்தில் ஞானத்தைப் பெற்ற சாலொமோன் இராஜாவையே சாத்தான் கவிழ்த்து விட்டான் (I இராஜா. 11:4-10). சாலொமோன் இராஜாவின் மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள். தாவீது இராஜாவைப் போல் சாலொமோன் கர்த்தரோடு உத்தமமாய் இருக்கவில்லை. கர்த்தரை பூரணமாய் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான் (வசனங்கள் 9, 10).



வாலிபனே! உனக்கு எச்சரிப்பாகவும், நீ கவனமாய் உன் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவன் வேதத்தில் இந்தப் பகுதியை எழுதியிருக்கிறார். எனவே எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள். காரணம் நீ கர்த்தருடையவன்! தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: காட்வின்

# அவமானத்திலிருந்து ஆசீர்வாதம்!!



**உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பம்பற்றிச் சொல்லுங்களேன்?**

நான் கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூர் என்ற பகுதியில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். அங்கிருந்து எனது தாத்தாவின் வேலைக்காகத் திருநெல்வேலிக்கு குடும்பமாகக் குடிபெயர்ந்தோம். அதன் பிறகு எனது அப்பாவின் வேலை நிமித்தம் என்னுடைய நான்கு வயதில் கோவில்பட்டிக்கு வந்தோம்.

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஆண்டவருக்கும் எங்களுக்கும் நெருங்கின தொடர்பு எதுவும் இல்லை. சிறுவயதாக இருக்கும்போது **Sunday school** போகவில்லை என்றால் அம்மா அடிப்பார்கள் என்று பயந்து அதற்காகப் போவேன். அங்குப் போனால் **snacks, juice** கிடைக்கும் என்பதற்காகவே போவேன். **VBS** போனால் ஒருநாள் **picnic** அழைத்துச் செல்வார்கள் என்பதால் தவறாமல் போவேன். இதுதான் எனது சிறு பிராய அனுபவமாக இருந்தது.

**உங்களது படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

படிப்பில் ரொம்ப **Bright**ஆன மாணவன் என்று சொல்ல முடியாது. நான் ஒரு **average student** தான். **Government Rules** படி எல்லோரையும் ஒன்பதாம் வகுப்புவரை பாஸ் பண்ணி விடுவார்கள். ஒன்பதாம் வகுப்புவரை எப்படியோ நானும் பாஸ் ஆகி வந்து விட்டேன். பத்தாம் வகுப்பில் தான் எனக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஒரு நாள் எனது அப்பாவை **principal** அழைத்து, ‘உங்கள் மகனின் **TC** வாங்கிக்கொண்டு போங்கள், அவனால் எங்கள் பள்ளியில் ரிசல்ட் ட்ராப் ஆகிவிடும், எங்களுடைய பள்ளியின் பெயரும் பாதிக்கப்படும்; எனவே நீங்கள் **TC** வாங்கிக் கொண்டு போங்கள்’ என்று சொன்னார்கள். எனது அப்பா ‘‘ஒரே ஒரு வாய்ப்பு கொடுங்கள் அவன் வெற்றி பெறுவான் என்று வாக்குறுதி தருகிறேன்’’ என்று **principal**லிடம் கெஞ்சி பத்தாம் வகுப்பை அதே பள்ளியில் தொடர்ந்து படிக்க வைத்தார்கள்.

இப்படி இருக்கும்போது தான் நாங்கள் குடும்பமாக ஜெபம் பண்ண ஆரம்பித்தோம். பத்தாம் வகுப்பு தேர்வுக்குப் போவதற்கு முன்பாக எங்கள் போதகரிடம்

சென்று ஜெபித்துவிட்டு தேர்வு எழுதச் செல்லுவேன். பத்தாம் வகுப்பில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றேன். எல்லோரும் நான் தோல்வி அடைவேன் என்று தான் சொன்னார்கள். ஆனால் இயேசப்பா எனக்கு ஒரு வெற்றியைக் கொடுத்தார். எனது அப்பா சிவில் இஞ்சினியராக இருந்ததால் என்னையும் சிவில் இஞ்சினியராக்க வேண்டும் என்பதுதான் அவரின் ஆசையாக இருந்தது. ஆனால் எனக்குப் பத்தாம் வகுப்பு முடிக்கும் வரைக்கும் எந்த இலக்கும் கிடையாது. நான் இஞ்சினியராக வேண்டும் அல்லது வேறு ஏதாவது ஆக வேண்டுமென்ற எந்த ஒரு இலக்கும் எனக்குக் கிடையாது. என்னுடைய மதிப்பெண்ணுக்கு இஞ்சினியரிங் படிக்க முடியாது. என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கும்போது தான் டிப்ளோமா படிக்கலாம் என்று சொன்னார்கள். நான் எடுத்த மதிப்பெண்களுக்கு டிப்ளோமா கூடப் படிக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

**கர்த்தரின் கிருபையால் 10ம் வகுப்பை முடித்தபிறகு, டிப்ளோமா படிக்க இடம் கிடைக்காதது வருத்தமாயிருக்கிறது. அதன் பிறகு தொடர்ந்து படிக்க முடிந்ததா?**

நான் பாலிடெக்னிக் படிக்க ஒரு கல்லூரிக்குச் சென்று எனக்குக் CS குரூப் வேண்டும் என்று கேட்டேன், எனது அப்பா சிவில் இஞ்சினியரிங் குரூப் வேண்டும் என்று சொன்னார்கள். அதனால், இரண்டு groupக்கும் form எழுதிக் கொடுத்தோம். ஆனால் மதிப்பெண்கள் குறைவாக இருந்ததால் அவமானப்படுத்தப்பட்ட நிலையில் வந்தேன். 'உனக்கு இந்தக் குரூப் தேவைப்படுகிறதா? நீ வெளியில் போய்ப் பேப்பரில் இந்தக் குரூப் பெயர்களை முதலில் எழுதிப்பார்' என்று சொல்லி மிகவும் அவமானப்படுத்தினார்கள். அதன் பிறகு சிவகாசியில் உள்ள ஒரு கல்லூரியில் சிவில் இஞ்சினியரிங் குரூப் கிடைத்தது. முதலில் எனக்கு ஆர்வம் இல்லை என்றாலும் அப்பா இந்த fieldல் இருப்பதினால் அவர்கள் கொஞ்சம் சொல்லிக் கொடுத்துப் படிக்கப் படிக்க அதில் ஆர்வம் வந்தது. மூன்று வருடம் கல்லூரி முடித்தேன். ஆனால் நான் டிகிரி முடிக்கவில்லை. எல்லோரும் என்னை வேலைக்குப் போகச் சொன்னார்கள். ஆனால் அப்பா BE படிக்க வேண்டும் என்று சொன்னதால், திருநெல்வேலியில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து முடித்தேன். அங்கும் நான் எல்லா பாடமும் வெற்றி பெறவில்லை.

**உங்களுடைய இந்தச் சூழ்நிலையிலிருந்து எப்படியொரு திருப்புமுனையை பார்க்க முடிந்தது?**

ஆண்டவரைத் தேடத் தேட எனது வாழ்வில் கர்த்தர் ஆசீர்வாதங்களை கொடுக்க ஆரம்பித்தார். நான் டிப்ளோமா முடித்தபிறகு சிறுவர் ஊழியம். படக்காட்சி ஊழியங்களுக்காக ஒரு அண்ணனுடன் செல்ல ஆரம்பித்தேன். அதில் பாட்டுக்கு Action





போடுவார்கள். அதில் நான் எனக்குத் தெரிந்த Action செய்வது, நாடகங்களில் நடிப்பது என்று என்னுடைய வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக மியூசிக் பக்கம் திரும்பியது. நான் Pad வாசிக்கக் கற்றுக் கொண்டு சில கூடுகைகளில் வாசிக்க ஆரம்பித்தேன். சில இடங்களில் தன்னார்வமாக ஊழியம் செய்து வந்தேன். இது நான் என் கல்லூரி படிப்பைப் படித்துக் கொண்டிருக்கும் போதும் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அதற்கு முன்பு வரைக்கும் நான் ஒரு பெயர் கிறிஸ்தவன் என்பது போல் தான் எனது வாழ்க்கை இருந்தது. ஆலயத்திற்கு போவேன், பைபிள் வாசிப்பேன், Pad வாசிப்பேன் அப்படித்தான் இருந்ததே தவிர, எனக்கும் ஆண்டவருக்கும் தொடர்பு என்பது குறைவாகத்தான் இருந்தது.

**சரி... அப்போ எப்பொழுது தான் இயேசுவுக்கும் உங்களுக்கும் உள்ள உறவு வளர்ந்தது ?**

கொரோனா வந்தபோது தான் என் வாழ்க்கையில் மாற்றம் வந்தது. எனக்கு, எனது அப்பா, அம்மா, தம்பி எல்லோருக்கும் கொரோனா வந்தது. எங்கும் போக முடியாது; வீட்டுக்குள் தான் இருக்க வேண்டும். அப்போதுதான் ஒரு மரண பயம் வந்தது. அந்த நேரத்தில் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்த்து வந்தோம். அந்த ஜெப வேளையில் ''இவ்வளவு நாள் உனக்கான காரியங்களை நான் செய்தேன் எனக்காக நீ என்ன செய்தாய்'' என்று தேவன் என்னோடு பேச ஆரம்பித்தார். அப்போதுதான் ஆண்டவரிடம் ''உமக்குப் பிரியம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்தது உண்மைதான்; ஆனால் இப்பொழுது என்னை நான் ஒப்புக்கொடுக்கிறேன்'' என்று என்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். பழைய வாழ்க்கையை பார்த்து, என் சபை நண்பர்கள் என்னைப் புறக்கணித்தார்கள். அன்றே அதே ஆலயத்தில் பின்னால் போய் முழங்கால் படியிட்டு என் பாவத்தை அறிக்கையிட்டு 'என் வாழ்க்கையை மாற்றும்' என்று அழுது ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். எப்பொழுது ஒப்புக்கொடுத்து ஜெபித்தேனோ, அப்பொழுது என் வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டானது. அதுவரைக்கும் ஒரு Musician ஆகவும் பின்னால்பாடும் பாடகனாகவும் தான் இருந்தேன். ஆண்டவருக்கு என்னை எப்பொழுது ஒப்புக்கொடுத்தேனோ, அதற்குப் பிறகு பாடல் ஆராதனையை நானே நடத்துவதற்கு தேவன் வாசல்களைத் திறந்து கொடுத்தார். என் நண்பர் மூலமாக எங்கள் ஊரில் உள்ள ஒரு ஆலயத்தில் புதன்கிழமை தோறும் ஆராதனை நடத்த தேவன் கிருபை செய்தார். இந்நாள் மட்டும் அந்த ஊழியம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனது அப்பாவும் ஊழியம் செய்கிறபடியால் அவர்களோடு இணைந்து ஊழியம் செய்யத் தேவன் எனக்குக் கிருபை செய்து வருகிறார்.




**சூப்பர்... இப்பொழுது உங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

ஆண்டவருக்கு கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுக்கிறேன். அது மட்டுமல்லாமல் எனது சிவில் பிசினஸ் நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. எப்போதெல்லாம் ஊழிய வாய்ப்பு வருகிறதோ அப்பொழுதெல்லாம் ஊழியமும் செய்து வருகிறேன். முதலாவது தேவனுக்கு நான் முதலிடம் கொடுக்கக் கொடுக்கத் தேவன் என்னை உயர்த்தினார். அதுமட்டுமல்லாமல் கடந்த வருடத்தில் Five Star சிக்கன் என்கிற ஒரு பிசினஸை ஆரம்பிக்கவும் தேவன் கிருபை செய்தார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நமக்கு எது *comfort* ஆக இருக்கிறதோ, அதிலிருந்து ஆண்டவர் உங்களைப் பிரிக்கிறார் என்று சொன்னால் ஆண்டவரிடம் கேள்வி கேட்காதீர்கள். ஏனென்றால் ஆண்டவர் எதைச் செய்தாலும் நன்மையாகவே செய்வார், அவர் செய்கிற காரியத்தில் ஒரு நோக்கம் இருக்கும், அவர் சித்தத்தை நிறைவேற்றுவார். நான் கேள்வி கேட்டது போல் அவரிடம் கேள்வி கேட்காமல் எல்லாவற்றிற்கும் நன்றி சொல்லுங்கள். நீங்கள் ஆண்டவரோடு இருந்தால், ஆண்டவர் உங்களோடு இருந்து உங்களை ஆசீர்வதித்து உங்களையும் உயர்த்துவார்.



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளிலேயே விடை இருக்கிறது.
அதைப் புரிந்து கண்டறிந்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. இல்ல, நீ வா என்னும் பெயர் எது?
2. ஒரு நிறத்தைக் கேட்கும் இடம் எது?
3. கொல், அப்புறம் போய் வா! என்னும் இடம் எது?
4. ஒரே ஒரு பந்தை குறிக்கும் பெயர் எது?
5. சுகவீனத்தில் மாட்டியிருக்கும் இடம் எது?
6. விளையாட்டைப் பார் என கூறும் இடம் எது?
7. முட்டைக்கு வங்கிக்கடன் கேட்கும் பெயர் எது?
8. காணாமல் போன பாடல் என்னப்படும் இடம் எது?
9. எலி மேல முட்டை இருக்கு என ரீல் விடும் பெயர் எது?
10. மன்னிக்கவும், குளி எனும் இடம் எது?

**கடந்த மாத விடைகள்**

1. நோவா (ஆதி. 7:1)
2. கிரேத்தா (அப். 27:7)
3. கில்போவா (1 சாமு. 28:4)
4. ஓர்பாள் (ரூத் 1:4)
5. சிக்லாக் (1 சாமு. 27:6)
6. சீகேம் (ஆதி. 12:6)
7. எக்லோன் (நியா. 3:12)
8. மிஸ்பா (ஆதி. 31:50)
9. எலிமெலேக்கு (ரூத் 1:2)
10. சாறிபாத் (1 இராஜா. 17:9)

**கடந்த மாத வெற்றியாளர்**
மெர்சி, பாளையங்கோட்டை
அவர்களை வாழ்த்துகிறோம்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.01.2025




Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

முகப்பு செய்தி: சதீஷ்



# இருதயத்தை கவனி!

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இளமைப் பருவம் ஒரே ஒரு முறை தான் வருகிறது. இப்பருவத்தில் எடுக்கும் தீர்மானங்கள் வாழ்வின் வெற்றியைக் குறிக்கிறது எனலாம். இளமைப் பருவத்தில் பலர் தங்களுடைய இருதயத்தில் தவறான தீர்மானங்கள் எடுத்து வழிதப்பிப் போய் விடுகின்றனர். ஒரு சிலரே சரியான தீர்மானங்களை எடுத்து, சோதனைகளை மேற்கொண்டு வாழ்வில் வெற்றி பெறுகின்றனர். **"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்"** (நீதி. 23:7). நம் வாயினால் சொல்வதைவிட இருதயத்தில் என்ன நினைக்கிறோம் என்பதே முக்கியம். எனவே நம் இருதயத்தின் நினைவுகள் வாழ்க்கையை வடிவமைக்கிறது.



வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் உங்கள் இருதயம் மோசம் போகாதபடி நீங்கள் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். இன்றைக்கு அநேகர் அவர்களின் சூழ்நிலையைக் காரணம் காட்டி தவறான முடிவுகளை எடுத்து வழி தப்பி சென்று விடுகின்றனர். எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு சென்ற தானியேலின் வாழ்க்கையில் சூழ்நிலைகள் எதிர்மறையாகத் தான் இருந்தது. அடிமையாகக் கொண்டு போகப்பட்ட தானியேலுக்கும் அவன்



உடன் இருந்தவர்களுக்கும் இராஜாவின் போஜனம் என்பது எவ்வளவு பெரிய நன்மையும் ஆசீர்வாதமாகவும் இருந்திருக்கும். ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் தானியேல் தன்னுடைய இருதயத்தில் சரியான தீர்மானத்தை எடுத்தான். **"தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்" (தானி. 1:8).** பாவம் செய்கிற சூழ்நிலை வந்த போதும் தானியேல் தன்னுடைய இருதயத்தைக் காத்து சரியான தீர்மானத்தை எடுத்துத் தேவனுக்கு பிரியமாய் நடந்து கொண்டான்.

தேவனுக்கு பிரியமில்லாத ஒரு காரியம் எவ்வளவு பெரிய நன்மையாகத் தோன்றினாலும், அதை வேண்டாம் என்ற ஒதுக்கிப் போடுகிற உறுதியான தீர்மானத்தை இருதயத்தில் எடுக்க வேண்டும். இன்றைக்கு அநேக தேவனுடைய பிள்ளைகள் உலகத்தில் இருக்கும் வாலிபர்களைப் போல எளிதாகக் காதலில் விழுந்து விடுவதும் அல்லது விழத் தூண்டப்படுவதும் வாடிக்கையாகி விட்டது. எனவே நீங்கள் உலகத்தால் கறைபடாதபடிக்கு உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ளுங்கள். **"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" (I தீமோ. 4:12)** என்று வேதம் தெளிவாக எச்சரிக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்களைப் பாதுகாக்கவும், நியாயம் விசாரிக்கவும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் தன் இருதயத்தை காத்து கொள்ள மனதில்லாமல் அவனுக்கு வைக்கப்பட்ட சோதனையில் விழுந்து, பெலிஸ்தர்களால் சிறைபிடிக்கப்பட்டு, தேவன் அவன்மீது வைத்திருந்த திட்டத்தையும் தரிசனத்தையும் இழந்து போனான். உங்கள்மீது ஆண்டவர் பெரிய திட்டத்தையும் நோக்கத்தையும் வைத்திருக்கிறார். இது நிறைவேற வேண்டுமானால் நீங்கள் உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.

''உலகத்தால் உண்டாகும் இப்படிப்பட்ட சோதனைகளிலிருந்து என் இருதயத்தை எப்படி காத்து கொள்வது'' என்று தானே யோசிக்கிறீர்கள்...? **"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை" (I கொரி. 10:13).** எல்லா மனுஷருக்கும் இளமைப் பருவத்தில் தங்களுடைய இருதயத்தில் இப்படிப்பட்ட சோதனைகள் வரத்தான் செய்யும்.

இதிலிருந்து விடுபட ஒரே வழி அனுதினமும் உங்கள் இருதயம் தேவனோடு இணைய வேண்டும். தானியேல் பாபிலோன் தேசத்தில் இருந்தாலும் அவனுடைய இருதயம் தேவனோடு இணைந்து இருந்தபடியால், அவனைச் சுற்றிலும் எவ்வளவு பாவ சோதனைகள் வந்த போதும் தேவன் அவனைத் தப்புவித்தார். நீங்கள் உலகத்தில் இருக்கும் வாலிபர்களைப் போலச் சிந்திக்கவோ, செயல்படவோ இடம் கொடுக்காமல், **"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" (நீதி. 4:23)** என்ற வேத வசனத்தின்படி உங்கள் இருதயத்தை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்கும்போது அவர் நீங்கள் உலகத்தால் கறைபடாதபடிக்கு காத்துக் கொள்ள வல்லமையுள்ள தேவனாக இருக்கிறார்.



எனக்கன்பான வாலிபனே, *"நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு;" (பிரசங்கி 11:10).* இந்த இளவயதில் உங்கள் இருதயத்தின் யோசனைகள் சீராக இல்லாவிட்டால் உங்கள் வாழ்க்கையை நீங்கள் அழித்துக் கொண்டவர்களாகி விடுவீர்கள். எனவே எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் இருதயம் தேவனை விட்டு வழி விலகிப் போகாதபடி காத்துக் கொள்ளுங்கள்...!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

# பெருகப்பண்ணும் தேவன்!!

நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் (எபி.6:14).

என் மகனே(ளே) "நான் உன்னை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவேன்" என்று உங்களைப் பார்த்துக் கர்த்தர் சொல்கிறார்.

**தேவன் ஆதாம், ஏவாளை சிருஷ்டித்து, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி 1:28).**

**ஜலப்பிரளயத்திற்கு பிறகு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள் என்றார் (ஆதி 9:1).**

**"சாறிபாத் விதவை வீட்டில் பஞ்சகாலம் முடிகிற வரைக்கும் மாவும் எண்ணையும் குறையவில்லை" (1 இராஜா. 17:16).**

**ஒரு தீர்க்கதரிசியின் மனைவி, கடன்காரர்கள் வந்து என் பிள்ளையைக் கொண்டுபோக கேட்கிறார்கள் என்று கலங்கி நின்றபோது, எலிசா, உன்னிடம் என்ன இருக்கிறது? என்று கேட்கிறார். அதற்கு அவள் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல், வேறு ஒன்றும் என்னிடத்தில் இல்லை என்று கூறினாள். அப்பொழுது கர்த்தர் அதைப் பெருகப் பண்ணி அற்புதம் செய்தார். (2 இராஜா. 4 :1).**

**5 அப்பம் 2 மீனை ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணியதால் வந்திருந்த 5000 ஆண்கள் சாப்பிட்டார்கள் (மத். 14:17).**

## தேவன் நமக்கு எந்தெந்த ஆசீர்வாதங்களைப் பெருகப்பண்ணுகிறார்?

### சந்ததியைப் பெருகப் பண்ணும் தேவன்

**"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும், உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்"** (ஆதி. 22:17) என்று ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்கு கொடுத்தபடியே அந்தச் சந்ததி பெருகியிருக்கிறதாக உபாகமம் 1:10ல் பார்க்கிறோம். **ஆதியாகமம் 26:24**ல் வாசிக்கும்போது, ஈசாக்குக்கு ஆண்டவர் தரிசனமாகி, "உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்" என்று சொல்கிறார். ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்த தேவன் ஈசாக்குக்கும் உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்

என்பதாகச் சொல்கிறார். அதே தேவன் அன்னாளின் சந்ததியையும் பெருகப் பண்ணினார்.

இதேபோல் நீங்களும் உங்கள் சந்ததியின் ஆசீர்வாதத்திற்காக வேண்டிக்கொள்ளும்போது தேவன் நிச்சயம் அதைப் பெருகப் பண்ணுவார். உங்களுடைய சந்ததி ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பம். ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்து நிறைவேற்றினத் தேவன் உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேற்றுவார்.

## கைகளின் கிரியையைப் பெருகப் பண்ணும் தேவன்

**"நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்க வில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று" (யோபு 1:10)** என்பதாகச் சாத்தான் யோபுவைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறான். யோபுவையும் அவன் குடும்பத்தையும் கர்த்தர் வேலி அடைத்துப் பாதுகாத்து வந்தார். 'நானும் எனது கும்பமும் இயேசுவுக்கு சொந்தம்' என்று நீங்கள் தினமும் ஜெபிக்கும்போது உங்கள் குடும்பத்தின் மீது தேவ பாதுகாப்பு உண்டாகும்.



**"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி உங்கள் மடியிலே போடுவார்கள்"** (லூக்கா 6:38). நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது உங்கள் மடி நிரம்பி வழியும்படி தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். கொடுக்கிறவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவார். தாராளமாய் தேவனுக்கு கொடுக்க வேண்டும், ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கிறவர்களைத்தான் தேவன் பெருகப் பண்ணுவார்.

### *நற்கிரியைகள் செய்தவர்களைத் தேவன் எப்படி ஆசீர்வதித்தார்?*

நற்கிரியைகள் செய்வதில் நீங்கள் விருத்தி அடைய வேண்டும் **(2 கொரி. 9:8)** என்றும் வேதம் சொல்லுகிறது. தபித்தாள் என்ற சீஷி தான் வசித்து வந்த பகுதியில் இருந்த விதவைகள் மற்றும் ஏழைகளுக்குத் தாராளமாய் உதவி செய்து வந்தாள். ஆனால் திடீரென்று ஒருநாள் மரித்து விட்டாள். அவளை யாரும் அடக்கம் பண்ண விரும்பவில்லை **(அப் 9:36)**, ஏனென்றால் அவள் அவ்வளவு நற்கிரியைகள் செய்திருந்தாள். மரித்துப் போனவளுக்காக ஜெபம் பண்ண பேதுருவை அழைத்து வந்தார்கள். ஆண்டவர் அவளை உயிரோடு எழுப்பிவிடுவார் என்கிற ஒரு விசுவாசம் அவர்களுக்குள் இருந்திருக்கும். அங்கிருந்த பெண்கள் பேதுருவிடம் இவள் உயிரோடு இருந்தால் எங்களுக்கு இன்னும் நன்மை செய்வாள் என்று சொன்னார்கள். இவள் உயிரோடு இருந்தால் நிறையபேருக்கு நன்மை செய்வாள் என்று அவளுடைய ஆயுசு நாட்களைக் கர்த்தர் பெருகப் பண்ணினார்.

ஆண்டவர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு ஏன் இவ்வளவு பெரிய அற்புதம் செய்தார்? அவளால் அநேகர் பிரயோஜனம் அடைந்தார்கள். ஆகவே ஆண்டவர் அற்புதம் செய்தார். உங்களுடைய ஆயுசு நாட்கள் பெருக வேண்டுமானால் நீங்கள் மற்றவர்களுக்குப் பிரயோஜனமான வாழ்க்கை வாழ வேண்டும்.

## சபைகளைப் பெருகப் பண்ணும் தேவன்

பெந்தேகோஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டபோது ஒரு நாளில் 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். 120 பேரில் ஆரம்பிக்கப்பட்ட சபை சாயங்காலத்தில் 3120 பேராகப் பெருகுகிறது. **அப் 4:4**ல் எருசலேமில் 5000 பேர் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டனர். திரளான ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசத்தில் வளர்ந்தார்கள் (அப். 5:14) என்பதாக வாசிக்கிறோம். 3ம் நாள் எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள் சபையில் சேர்ந்து சபை வளர்ந்தது. ஆத்துமாக்கள் கூட்டம் கூட்டமாகச் சபையில் சேர்ந்து, சீஷர்களின் தொகை மிகவும் அதிகமாகப் பெருகியது. 2ஆம் அதிகாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட சபை, 4ஆம் அதிகாரம் வருவதற்குள் வளர்ந்து பெருகியது.

**அன்பான வாலிபர்களே! நீங்கள் எல்லாவற்றிலும் பலுகிப் பெருக வேண்டும் என்றே ஆண்டவர் விரும்புகிறார். ஆனால் அதற்குத் தேவன் எதிர்பார்க்கிற காரியங்கள் உங்களிடம் காணப்பட வேண்டும். அவர் எதிர்பார்க்கும் காரியங்களை நீங்கள் செய்யும்போது உங்கள் படிப்பில், வேலையில், குடும்பத்தில் உங்களை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவார்!!**

உண்மை சம்பவம்: கமல் எபனேசர்



# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!

## ஸ்தேவான்

கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள் என்ற தலைப்பில் நாம் சில நபர்களைக் குறித்து பார்க்க  இருக்கிறோம். அவர்களில் முதலாவது நபராக ஸ்தேவானைக் குறித்து பாப்போம். ஸ்தேவான் பந்தி விசாரிப்பு ஊழியமான இந்த எளிமையான பணியைக் கூடத் தாழ்மையோடு ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி வந்தார். தேவன் அவருக்குக் கொடுத்த கிருபையின்படி பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்து பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து வந்தார் (அப். 6:8). தன்னுடைய வாழ்க்கையில் தேவனுக்கென்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்து வந்தவர் ஸ்தேவான்.

இப்படி தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, ஸ்தேவான் கிறிஸ்துவை தைரியமாய் பிரசிங்கப்பதைப் பார்த்து ஒருசிலர் அவருக்கு விரோதமாக எழும்பி தர்க்கம்பண்ணினார்கள். இவரோ எந்தவித கடினமான வார்த்தைகளையும் பேசாதவராய், சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள் என்று சாந்தமாகவே தேவனுடைய வார்த்தைளை அறிவித்தார் (அப். 7:2). அவர் தன்னுடைய ஜீவனை குறித்து பயப்படாமல் வேதத்தின் சத்தியத்தை உள்ளபடி போதித்தார். அப்போது அவர்கள் மூர்க்கமடைந்து, அவரைக் கொலை செய்யக் கற்களை எறிந்தார்கள். அப்படி இரக்கமில்லாத அந்த மனிதர்களையும் மன்னித்தார். மட்டுமல்லாது இயேசு கிறிஸ்துவை போலவே, ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் ஜெபித்து தன் ஜீவனை விட்டார் (அப். 7:60).

கிறிஸ்துவுக்காகத் தன்னுடைய வாழ்க்கையின் கடைசி மூச்சு வரை நிலைத்து நின்ற ஒரு சீஷன்தான் ஸ்தேவான். இவருடைய மரணம், அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு அடித்தளமாய் அமைந்தது. இதை அறிந்திருக்கிற நாம், நம் வாழ்வில் கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷனான ஸ்தேவானைப் போல வாழ நம்மை அர்ப்பணிப்போம். நம்முடைய நண்பர்களோ, உறவினர்ளோ நம்மை ஒதுக்கி வைத்தாலோ நமக்குச் சில நன்மைகள் கிடைக்காமல் போனாலும், நமக்கு எந்த இக்கட்டான சூழ்நிலைகள் வந்தாலும் நான் இயேசு கிறிஸ்துவை சார்ந்தவன் என்ற உணர்வோடு இயேசுவை மறுதலிக்காமல் நாமும் ஸ்தேவானைப் போல கடைசிவரை சீஷர்களாக கிறிஸ்துவுக்காக நிலைத்திருப்போம்!



தகவல்: பெனிட்டா

# ஆசரிப்பு கூடாரம்



***நாம் அனைவரும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள பழைய ஏற்பாட்டைப் பலமுறை வாசித்திருப்போம். அப்படி வாசிக்கும்போது பல காரியங்கள் நமக்குப் புரியாதவைகளாகவே இருக்கும். அதில் ஆசரிப்புக் கூடாரமும் ஒன்று. தேவன் மோசேயிடம் ஒரு ஆசரிப்பு கூடாரம் கட்டும்படி சொன்னார். அதைக் கட்டுவதற்கான மாதிரியையும், அதை எப்படி செய்ய வேண்டும், எந்தப் பொருட்களினால் செய்ய வேண்டும், எந்த அளவு இருக்க வேண்டும் என்பதையும் தெள்ளத் தெளிவாகக் கூறினார். (யாத். 25 – 27 அதிகாரங்கள்).***

ஆசரிப்பு கூடாரம் பரலோகத்தில் உள்ளவைகளுக்கு ஒரு நிழலாட்டமாக உள்ளது. எதற்காக இந்த ஆசரிப்பு கூடாரம் கட்டப்பட்டது? இதை எப்படி செய்தார்கள்? இதன் முக்கியத்துவம் என்ன? அது எதற்கு அடையாளமாக உள்ளது? அதின் வெவ்வேறு பாகங்கள் என்ன? இதன் பின்னணியில் உள்ள ஆவிக்குரிய அர்த்தம் என்ன? போன்ற நீங்கள் அறிந்திராத சில ஆச்சரியமான சத்தியங்களை இந்த பகுதியில் தெரிந்து கொள்ளலாமா?

## ஆசரிப்புக் கூடாரம் எப்படி கட்டப்பட்டது?

முதலில் வெளிப்புற மதிலைக் கட்டினார்கள். இதன் சுவர் தொங்கு திரையினால் ஆனது. இந்தத் தொங்கு திரைகள் ஒவ்வொன்றும் 5 முழ இடைவெளியில் தூண்களில் தொங்கவிடப்பட்டிருந்தது. 4 பக்கங்களிலும் 60 தூண்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**ஆசரிப்புக் கூடாரத்தின் அளவுகள்:** வடக்கு மற்றும் தெற்கு பக்கங்கள் 150 அடியும், கிழக்கு மற்றும் மேற்குப் பக்கம் 75 அடியுமாய் இருந்தது. இது ஒரு நபர் எப்படி எட்டிப் பார்த்தாலும் காண முடியாத அளவு உயரமாக இருந்தது. இவற்றின் உட்பகுதி பிரகாரம் என்று அழைக்கப்பட்டது.

**ஆசரிப்பு கூடாரத்தின் வெளிப்புற விவரங்கள்:**

ஆசரிப்பு கூடாரத்தின் வாசல் கிழக்கு பக்கத்தில் மாத்திரம் இருந்தது. இது 30 அடியாக இருந்தது . இளநீல நூல் மற்றும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும், மெல்லிய பஞ்சு நூலாலும் சித்திர தையல் வேலைப்பாடுகளால் செய்யப்பட்டிருந்தது.

**வெண்கல பலிபீடம்:** ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே இருக்கும் இந்த தகன பலிபீடம், சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டு வெண்கல தகட்டினால் மூடப்பட்டிருந்தது. இதன் நீளம் மற்றும் அகலம் 7 1/2 அடியும், உயரம் 4 1/2 அடியும் கொண்டது. இவற்றில் பலிகள் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தின் இரட்சிப்புக்காக சிலுவையில் மரித்ததை இது காண்பிக்கின்றது.

**தண்ணீர் தொட்டி:**


இந்த தண்ணீர் தொட்டி வெண்கல பலிபீடத்திற்கும் ஆசரிப்பு கூடாரத்தின் உட்பகுதிக்கும் இடையே பிரகாரம் என்று அழைக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இது வெண்கலத்தால் செய்யப்பட்டது. இதில் உள்ள தண்ணீரினால் ஆசாரியர் மற்றும் லேவியர் தங்கள் கை கால்களை சுத்தம் செய்வது வழக்கம். அப்படி செய்ய தவறினால் மரணம் நிச்சயம் (யாத். 30:17-21; 40:30-32).

## இதன் அர்த்தம் என்ன, இது எதை உணர்த்துகின்றது?

வெண்கலத்தொட்டி வேதாகமத்திற்கும், தண்ணீர் தேவனுடைய வசனத்திற்கும் அடையாளமாக உள்ளது. வசனத்தால் நம் இருதயத்தை நிரப்பும்போது நம்மில் உள்ள பாவங்கள் நம்மை விட்டு விலகுகிறது. லேவியர்கள் பிரகாரம் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் ஆசரிப்பு கூடாரத்தின் முக்கியமான பகுதியான பரிசுத்த ஸ்தலத்தைக்குறித்து பார்க்கலாம்...

சாதனை: சுமா



# ஒவ்வொரு நிமிடமும் நம்முடையதே!

அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்! காலங்களும் நமக்குக் கொடுக்கப்பட்ட நேரங்களும் மிக விரைவாக ஓடிக் கொண்டிருக்கின்றது. ஆனால் பெரும்பாலானோர் காலங்களையும் நேரங்களையும் தங்களுடைய வசமாக்கிக் கொண்டு வெற்றி அடைகின்றனர். ஆனால் சிலர் நேரத்தை வீணடித்துத் தோல்வியை மட்டுமே காண்கின்றனர். நான் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தாமல் வீணடித்துக்கொண்டிருக்கிறேன் என்று வருந்துபவர்களாக இருப்பீர்களானால் இந்தப் பகுதி உங்களுக்காகத் தான்...

**Todd Graves 1972ல் அமெரிக்காவில் பிறந்தார். ஜார்ஜியா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். அவர் யூனிவர்சிட்டியில் படிக்கும்போது சொந்தமாக உணவகம் திறக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்தது. இந்த ஆசையை நிறைவேற்ற Gravesயிடம் போதுமான பணம் இல்லை. எனவே பணம் திரட்டக் கலிபோர்னியாவில் உள்ள ஒரு எண்ணைய் சுத்திகரிப்பு ஆலையில் வாரத்திற்கு 90 மணி நேரம் அயராமல் கடுமையாக உழைத்தார். ஆனால் அதில் வந்த வருமானம் அவருக்குப் போதுமானதாக இல்லை. இன்னும் பணம் தேவைப்பட்டதால் அலாஸ்க்கா சென்று ஒரு நாளுக்கு 20 மணி நேரம் கடுமையான சூழ்நிலையில் சால்மன் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டார்.**

மேலும் தன்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உதவியுடன் தன் சொந்த பணத்தை கொண்டு, தன்னுடைய கனவு உணவகத்தைத் Raising Cane's என்ற பெயரில் தொடங்கினார். உணவகத்தில் பணிபுரிந்த அனுபவமும் இல்லாததால் வாரத்தில் ஏழு நாட்களும் கடினமாக உழைத்தார். அவருடைய கடின உழைப்பின் காரணமாக ரைசிங் கேன்ஸ் சிக்கன் ஃபிங்கர்ஸ் என்ற நிறுவனம் தற்போது 3.7 பில்லியன் டாலர் மதிப்புள்ள, வளர்ந்து வரும் நிறுவனமாக மாறியுள்ளது. இந்த Special Fast Food Chicken Fingers இவர் உழைப்பின் காரணமாக 40க்கும் மேற்பட்ட இடங்களில் 800 கிளைகளைக் கொண்டுள்ளது. தன் நிறுவனத்தைத் தொடங்குவதற்கு முன்பு கஷ்டப்பட்டாலும் டாட் கிரேவ்ஸ் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. சிறு வயதில் 20 மணி நேரம் வேலை செய்து சொந்த உணவகத்தைத் திறப்பதற்காகக் கடுமையாக உழைத்து, இன்று அமெரிக்காவின் பில்லியனர்கள் பட்டியலில் இவரும் ஒருவர்.










*இதை வாசிக்கும் நண்பர்களே! நம்மில் அநேகர் எனக்குப் போதுமான நேரம் இல்லை, அதனால் தான் என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை என்று நேரத்தைக் குறை கூறிக் கொண்டு இருக்கின்றோம். சிறிது கவனித்துப் பார்த்தால் நாம் தான் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றோம். Todd Gravesஐப் போல் ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்படுத்தினால் காலங்கள் நம்முடைய பெயரைப் பெருமையாகச் சொல்லும்.*




பேர்ணாம்பட்டில்...

## வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள்: மார்ச் 16, (ஞாயிற்றுக்கிழமை)

இடம் : எழுப்புதல் ஜெபக் கூடாரம்,
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு,
வி .கோட்டா ரோடு, பேர்ணாம்பட்டு.

நேரம்: மாலை 3 மணி முதல் 6 மணி வரை

தேவ செய்தி:
சகோ. அவினாஷ்

தொடர்புக்கு :
99408 54125



இயேசு விடுவிக்கிறார்

**வாலிபர் உலகம்**

தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547


LIVE STREAMING

Revival IGNITERS

ON SUNDAY 23rd FEBRUARY
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

மிஷனெரி பயணம்: வில்லியம்



# எழுப்புதலின் விதைகள்!

கடைச்சிக்கால எழுப்புதலின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே! நம் ஆண்டவர் எழுப்புதலை தேசத்தில் தீவிரமாகப் பரவச்செய்து கொண்டிருப்பதை நம் கண்கள் காணவும், காதுகள் கேட்கவும் செய்கிறோம். நாம் காணும் இந்த மகத்தான எழுப்புதலுக்காக அநேக தேவமனிதர்கள் தியாகமாக அர்ப்பணித்து விதையாக வித்திட்டுள்ளனர். எழுப்புதலை பிரகடனப்படுத்தும் இந்நாட்களில் உங்களை ஊக்கப்படுத்த எழுப்புதலுக்கு விதைகளாக மாறியவர்களைக் குறித்து ஒவ்வொரு மாதமும் இந்தப் பகுதியில் காண்போம்.

இங்கிலாந்து தேசத்தில் கான்வெல் என்ற இடத்தில் 1781ஆம் ஆண்டு செல்வ செழிப்பான வியாபாரியின் மகனான பிறந்த **ஹென்றி மார்ட்டின்**, சகல வசதிகளோடு வாழ்ந்து வந்தார். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கணிதத்தில் முதல் மாணவனாகத் தேறினார். வாலிப வயதில் ஆண்டவரைத் தேடாமல் வாழ்ந்த இவர், தன்னுடைய தந்தையின் மரணத்திற்கு பின்பு ஆண்டவரைத் தேட ஆரம்பித்தார். இவரது சகோதரியின் ஜெபமும், போதகரின் ஆலோசனைகளும், டேவிட் பிரைய்னார்ட் அவர்கள் எழுதிய புத்தகமுமே இவரை ஆண்டவரிடம் பூரணமாக அர்ப்பணிக்க வைத்தது. ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வந்த மார்ட்டினுக்கு, டேவிட் பிரைய்னார்ட், வில்லியம் கேரி போன்ற மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, தானும் ஒரு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்று வாஞ்சைக் கொண்டார். அதற்காக ஒவ்வொரு நாளும் பல மணி நேரத்தை ஜெபத்திலும், தியானத்திலும் தன்னை ஆயத்தப்படுத்தி, இந்த உலகத்தை வெறுத்து தேவனை மட்டும் மகிமைப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்.

அவர் திருமணம் செய்ய விரும்பிய லிடியா என்ற பெண் மிஷனெரியாக வர விரும்பவில்லை என்பதை



அறிந்ததும் திருமணத்தைக் கைவிட்டு தேவ அழைப்புக்குக் கீழ்ப்படிந்து பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியில் 1805ஆம் ஆண்டு ஆங்கிலிக்கன் போதகராகப் பட்டமும் பெற்றார். தனது 24வது வயதில் 9 மாத கப்பல் பிரயாணத்திற்கு பிறகு மிஷினெரியாக இந்தியாவில் உள்ள கல்கத்தாவிற்கு வந்து டேவிட் பிரைய்னார்டுடன் தங்கி ஊழியம் செய்தார்.

சில வாரங்களுக்குப் பிறகு ஒருநாள் மார்ட்டின் தோட்டத்தில் இருக்கும்போது, ஒரு பெரும் கூட்டம் தேர் இழுத்து வருவதையும், அந்தத் தேரின் சக்கரத்தின் அடியில் ஒரு சிறுவன் விழுந்து நசுங்கியதையும், கணவன் இறந்தவுடன் மனைவியும் உயிருடன் எரிக்கப்படுவதையும் மார்ட்டின் பார்த்து அதிர்ந்து போனார். இவர்களின் மூடப்பழக்கத்தை எப்படி மாற்றுவது என்று வில்லியம் கேரியிடம் கேட்டபோது, அவர் ‘‘ஆண்டவருடைய வார்த்தையால் மட்டுமே விடுவிக்க முடியும்” என்பதாகச் சொன்னார். உடனே வங்காளம், சமஸ்கிருதம், பாரசீகம், ஹிந்துஸ்தான், அராபிய மொழிகளைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். பாட்னா என்ற இடத்தில் காலை நேரங்களில் போதகராகவும், சாயங்கால வேளைகளில் இந்துஸ்தானி, பாரசீகம், அராபிய மொழிகளில் வேதத்தை மொழி பெயர்க்கவும் ஆரம்பித்தார். அதோடு இந்தியர்கள் வேதத்தைப் படிப்பதற்காகப் பள்ளிகள் அமைத்து எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்தார். அங்கிருந்த 60 மில்லியன் இந்திய மக்களுக்கு இந்த நற்செய்தி கிடைக்க வேண்டும் என்ற பாரத்துடன் இரவு நேரங்களில் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார் (ஒரு அதிகாரத்தை மொழிபெயர்க்க 10 மணி நேரம் ஆனது). தீனாபூரில் 5 பள்ளிக்கூடங்களை நிறுவினார். இதன் மூலம் அனேக ஏழைப்பிள்ளைகள் படிப்பறிவு பெற்றனர்.

தனது கடின உழைப்பினால் புதிய ஏற்பாடு ஹிந்தி மொழியில் வெளியிடப்பட்டது. இந்தியர் மட்டுமல்லாமல், அராபியர், பாரசீகர், சீரியர், சீன, ஆப்பிரிக்கா தேசத்தின் பெரும் பகுதியினர் மற்றும் துருக்கி மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க 18 மாதத்தில் கற்று, அராபிய பாரசீக மொழிகளில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்தார். பல சாதுக்கள், முகமதியர்கள் மத்தியிலும் ஊழியத்தை செய்து அநேகர் ஊழியர்களாக மாற வழிவகுத்தார்.

மார்ட்டினின் கடின உழைப்பும் இந்தியாவின் புழுதியும் அவரது நுரையீரலை பாதித்ததோடு, வெப்பமும் அவருக்கு ஒத்துக்கொள்ளாமல், அவரது உடல் அதிக பலவீனப்பட்டதால், அவரைத் தாய் நாட்டிற்கு போக மருத்துவர்கள் ஆலோசனைக் கொடுத்தார்கள். ஆனால் அவர் பாரசீகம் செல்லத் தீர்மானித்தார். அங்கு அதிகமான வெப்பமாக இருப்பதால் உங்களால் வாழ முடியாது என்று சொன்னபோதும் கேட்காமல், ‘தேவனுக்காகப் பெரிய காரியத்தைச் செய்வதே எனது நோக்கம்’ என்று கூறி, பெர்சியாவின் புஷிர் என்ற இடத்திற்கு சென்றார். அங்கு எரிபந்தமாக எரிகிற அந்த வெப்பமான சூழ்நிலை அவருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தியதால், சிராஜ் என்ற மலைப் பாங்கான நகரில் சென்று தங்கி தனது பணியைத் தொடர்ந்தார். தனது கடின உழைப்பினால் 9 மாதங்களில் பாரசீக மொழியில் ஒரு நேர்த்தியான புதிய ஏற்பாட்டை வெளியிட்டார்.

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபனே! தரிசன வீரர்கள் நீண்ட நாட்கள் வாழாமல் இருக்கலாம்; ஆனால் அவர்கள் நிறைவேற்றி முடித்த பணி தொடர்ந்து, மக்களை இயேசுவின் பக்கம் திருப்பிக் கொண்டிருக்கிறது. ஹென்றி மார்ட்டின் மொழி பெயர்த்த வேதாகமம் அன்று ஒரு பெரிய வசன எழுப்புதலை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இன்னும் அநேகருக்கு ஓர் அறைகூவல் செய்தியை அறிவிப்பதாக உள்ளது. வசதியான வாழ்க்கையை விட்டுத் தேவப்பணி செய்யத் தன்னை ஒப்புக் கொடுத்த ஹென்றி மார்ட்டினைப் போலத் தேவனுடைய சுவிசேஷ பணியைச் செய்வதற்கு கிறிஸ்துவின் அன்பு உன்னை நெருக்கி ஏவவில்லையா? இன்றைக்கும் கர்த்தரின் அழைப்பு உன்னை நோக்கிக் கடந்து வருகிறது. எழுப்புதலை பரவச்செய்யும் பணியை ஆண்டவர் காட்டும் இடத்தில் செய்வதற்கு நீ ஆயத்தமா?**



சிந்திக்க: ரெபேக்கா



# தாவீது
## இச்சையைத் தூண்டின இருதயம்

கர்த்தர் தாவீது ராஜாவை ஆசீர்வதித்து அவனுக்கு எல்லாவற்றிலும் ஜெயத்தைக் கொடுத்தார். கர்த்தருடைய உதவியுடன், தாவீதின் இராணுவம் அவர்களின் எதிரிகளை வென்றது. ஆனால் ஒருநாள் போருக்குச் செல்லாமல் அரண்மனையில் இருந்தபோது, பத்சேபாள் என்ற அழகான பெண் ஸ்நானம் பண்ணுவதைப் பார்த்ததும், அவளை அடைய வேண்டுமென்ற எண்ணத்தைத் பிசாசு தாவீதின் இருதயத்தில் தூண்டினான். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி, அவளது கணவனான உரியாவைத் திட்டமிட்டு கொன்றான். பத்சேபாளை தன் வீட்டிற்கு அழைத்தனுப்பி, அவளை மணந்தான் (2 சாமு. 11ம் அதிகாரம்). தாவீது பாவத்தில் விழுந்தபோது அவனால் தேவனை தரிசிக்க முடியவில்லை (2 சாமு. 12:1-13). தேவன் தமது தீர்க்கதரிசியின் வாயிலாகத் தாவீதுக்கு உணர்த்தியபோது, பாவ உணர்வடைந்து, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும் என்று ஜெபித்தான்.



# யூதாஸ் காரியோத்
## பண ஆசையைத் தூண்டின இருதயம்

கர்த்தராகிய இயேசுவினால் ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட ஒரு சீஷன். இயேசுவோடு கூட மூன்றரை வருடங்கள் தேவ இராஜ்ஜிய பணியைச் செய்தவன். பணப்பையை தன் கையில் வைத்திருந்ததினால் (லூக்கா 12:4-5) என்னவோ 30 வெள்ளி காசிற்காக இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படியாக அவன் இருதயத்தை சாத்தான் தூண்டினான். இயேசுவும் அவரது சீஷர்களுடனான ஐக்கியத்திலிருந்து விலகிப் பின்வாங்கிப் போய் ஆக்கினை அடைந்தான். பிசாசானவனால் தூண்டபட்ட இருதயம் உடையவன் என்ற அவசொல்லுக்கும் ஆளானான். தேவ பணியைச் செய்ய வேண்டியவன் தன்னுடைய இருதயத்தின் நினைவுகளைச் சரியாகக் கவனித்து காத்துக்கொள்ளாததால் நான்று கொண்டு செத்து மடிந்தான் (மத். 27:5).



# சாலொமோன்

## வழுவிப்போன இருதயம்

சாலொமோன் தேவனுக்காக மகிமையான ஆலயத்தைக் கட்டினார். அதனைத் தேவனும் அங்கீகரித்தார். தன் கண்களும், இருதயமும் எந்நாளும் அந்த ஆலயத்திலிருக்கும் என்றும் தேவன் சாலொமோனுக்குச் சொன்னார். அதேசமயம், தனது கட்டளைகளுக்குச் செவிகொடாமல் பின்வாங்கிச் சென்றால் அதே ஆலயத்தை தமது சமூகத்தைவிட்டுத் தள்ளிப்போடுவதாகவும் தேவன் கூறினார். அப்படியிருந்தும், தேவனின் கட்டளைக்கு விரோதமாக அநேக அந்நியப் பெண்களோடு தொடர்பு வைத்து, அந்தப் பெண்கள் அவருடைய இருதயத்தைத் தேவனைவிட்டு வழுவிப்போகப் பண்ணினார்கள் (1 இராஜா. 11:3). தேவனுக்காக மகிமையானதொரு ஆலயத்தைக் கட்டியெழுப்பிய சாலொமோன், இப்போது அந்நிய தேவர்களுக்காக மேடைகளைக் கட்டினார். தேவனுக்குக் கொடுக்கவேண்டிய இடத்தை வேறு காரியங்களுக்குக் கொடுக்கும்போது, அவைகள் தேவனைவிட்டு நம்மைப் பிரித்துவிட ஏதுவாகிறது. அவைகளே நமக்கும் தேவனுக்கும் இடையிலான ஒரு விக்கிரகமாகி, தேவனது வழிகளை விட்டு நம்மைப் பிரித்துப்போடுகிறது.



# நேபுகாத்நேச்சார்

## பெருமையான இருதயம்

உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக்கொடுக்கிறார் என்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறிந்திருந்தும், மிகவும் பெருமை கொண்டு "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" என்று அறிக்கையிட்டான். இப்படி அவன் பேசினவுடனே கர்த்தரின் நியாயத்தீர்ப்பு அவன்மேல் வந்து அவன் மிருகத்தைப் போலானான். ஒருவேளை இன்றும் சிலர் அந்த ராஜாவைப் போலத் தங்கள் ஆளுகையை குறித்து மேன்மை பாராட்டலாம். தேசத்திலே உண்டாயிருக்கும் செழிப்புக்கள் தங்களுடைய ஆக்கங்கள் என்று பறைசாற்றிக் கொள்ளலாம். பெருமையானவைகளை பேசிக் கொள்ளலாம். ஆனால், உன்னத்திலே வீற்றிருக்கும் உன்னதமான தேவன் மனிதர்களுடைய இருதயங்களின் நினைவுகளை ஆராய்ந்து அறிகின்றவர். அவர்களுடைய பெருமையான பேச்சுக்கள் அறிந்திருக்கின்றார். கர்த்தர் முன்குறித்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாருக்கு புத்தி திரும்ப வந்தது. அவன் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினான் (தானி. 4:34).

கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

Hello friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? உங்க அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் நல்வாழ்த்துக்கள்!

என்னங்க உங்க எல்லாருக்கும் Surprise பிடிக்கும் தானே? இந்த புதிய ஆண்டில் உங்க எல்லோருக்கும் ஒரு பெரிய Surprise காத்திருக்கிறது. அது என்னான்னு தானே பார்க்கிறீர்கள்! வேதாகமத்தில் மாத்திரமல்ல; நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலக்கட்டத்திலும் நமக்கும், சக மனிதர்களுக்கும் தேவன் செய்கிற கிரகிக்க முடியாத, இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களை பரபரப்பு செய்திகள் என்ற தலைப்பில் பார்க்க போகிறோம்.

என்னங்க Surprise பிடிச்சிருக்கா? இந்த மாதம் என்னன்னு பார்க்க நீங்க Readyயா ?
வாங்க இந்த மாத பரபரப்பு செய்தியை பார்க்கலாம்.

இஸ்ரவேல் நாட்டில் நாசரேத்து என்னும் நகருக்கு வடகிழக்கில் 7 கிலோமீட்டர் தொலைவில் இந்த கானா என்னும் ஊர் அமைந்துள்ளது. இந்த ஊர் மிகவும் செழிப்பு வாய்ந்தது. எங்கு பார்த்தாலும் கண்ணைப் பறிக்குமளவிற்கு அழகான திராட்சை தோட்டங்கள் இருக்கும். யூத பாரம்பரியத்தின் படி அவ்வூரில் திருமண விழா 7 நாட்கள் நடைபெறும். இயேசுவிற்கு மிகவும் நெருங்கிய உறவினருடைய திருமணம் நடைபெற்று கொண்டிருந்தது. அந்த திருமணத்தில் உறவினர், சுற்றத்தார் வந்து அந்த புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி செல்லவே ஆடலும் பாடலும் கோலாகலமாக திருமணம் களைகட்டிகொண்டிருந்த போது, விருந்தினர்களுக்கு பகிர்ந்து கொண்டிருந்த திராட்சை ரசம் குறைய தொடங்கியது. இது அந்த திருமண வீட்டாருக்கு பெரிய அவமானம் ஏற்படும் சூழலை உருவாக்கியது. இந்த செய்தி இயேசுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர் ஏற்ற வேளையில் வெறும் தண்ணீரை முந்தின ரசத்தைப் பார்க்கிலும் அதிக ருசியுள்ள ரசமாக மாற்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதத்தை செய்தார்.





**Friends, கொஞ்சம் யோசிச்சு பாருங்களேன்! திராட்சை ரசம் தயாரிப்பதற்கு குறைந்தது 5 முதல் 6 நாட்கள் வரை ஆகும். ஆனால் இயேசு ஒரு நொடியிலேயே வெறும் தண்ணீரை உயர்தர திராட்சை ரசமாக மாற்றி குறைவை நிறைவாக்கி, அவமானத்தை சந்தோஷமாக மாற்றினார்**

**இந்த மாதிரி அற்புதம் எல்லாம் இயேசு வாழ்ந்த நாட்களில் நடந்திருக்கும் என்று சிந்தித்த நேரத்தில், கோயம்புத்தூரிலிருந்து ஒரு பரபரப்பான செய்தி எனக்கு கிடைத்தது.**

நம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு ஏழை வாலிப மகள் தன் தாயாருடன் வசித்து வந்தாள். மிகவும் கஷ்டப்பட்டு உயர்கல்வியை படித்து முடித்தாள். அவளுக்கு திருமண வயது வந்தது. இவர்களது உறவினர்களோ, ஆண்டவரை அறியாதவர்கள். இந்த வாலிப மகளும், தாயாரும் ஆண்டவரிடம் ஜெபித்து நல்ல வரனைத் தேடவே, ஏற்ற ஒரு துணையை ஆண்டவர் காட்டினார் திருமணத்திற்கான நாளும் குறிக்கப்பட்டு, எல்லா வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் இவர்கள் கையிலோ எந்த பணமும் இல்லை. இவர்களது உறவினரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால் அந்த மகளும் தாயாரும் விடாப்பிடியாக இயேசுவை மாத்திரமே சார்ந்து, தங்கள் திருமணத்திற்கான அனைத்து தேவைகளையும் ஒரு நோட்டில் எழுதி தினமும் அதில் கை வைத்து ஜெபித்து வந்தனர். தங்களது தேவைகளை ஒரு மனிதரிடமும் கூறவில்லை. திருமணத்திற்கு ஒரு வாரம் இருக்கும்போது, அந்த தாயார் நோய்வாய்ப்பட்டார். இந்த மகளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை ஆனாலும் இயேசுவை மாத்திரமே நம்பினார்கள். நடந்தது என்ன தெரியுமா?



ஒரு நாள் அந்த வாலிப மகளை பார்ப்பதற்காக அவளது ஜெபக்குழுவில் இருக்கிற நண்பர்கள் வீட்டிற்கு வந்து, அவளுக்கு திருமண பரிசு கொடுத்தனர். அவள் அதை திறந்து பார்த்தபோது அதில் தங்க நகைகள் இருந்தது. அது மாத்திர மல்ல அந்த பெண்ணின் திருமணத்திற்கான பணத்தேவைகளும் சந்திக்கப்பட்டது.

இதில் ஆச்சரியமான காரியம் என்னவென்றால்; இவர்கள் எங்கும் கடன் வாங்கவில்லை, இவ்வளவு தேவை இருக்கிறது என்று யாரிடமும் சொல்லவில்லை. தேவன் ஒரு சில மனிதர்களின் இருதயங்களை உதவி செய்யும்படி ஏவினார். அந்த மகள் ஜெபித்தப்படியே, ஒரு சிறந்த தகப்பனாக இயேசுமுன் நின்று அவளது திருமணத்தை முடித்தார். இரட்சிக்கப்படாத உறவினர்கள் வியந்து ஆச்சரியப்பட்டனர். இயேசுவே மெய்யான தேவன் என்று அவர்கள் அறிந்து கொள்ளும் அளவிற்கு தேவன் பெரிய அற்புதத்தை செய்தார்.



**பார்த்தீர்களா? friends கானா ஊரில் ஒரு அற்புதத்தை செய்த தேவன் இன்றைக்கும் இப்படிப்பட்ட அநேக அற்புத அடையாளங்களை செய்து தன்னை உயிருள்ளவராக நிரூபித்துக் கொண்டுதான் இருக்கிறார். இன்றைக்கு நீங்களும் ஏதோ ஒரு தேவையில் இருக்கிறீர்களா? கலங்காதீர்கள். உங்களுக்கும் தேவன் இப்படிப்பட்ட அற்புதங்களை செய்வார். அற்புதம் தாமதமானாலும் தொடர்ந்து நாம் விசுவாசத்துடன் ஜெபிக்கும் பொழுது ஏற்ற வேளையில் அற்புதங்களை காண்போம்.**

ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு

## பிப்ரவரி 2025



**1.** காசா போர் தொடங்கியதிலிருந்து சுமார் 45,028 பேர் உயிரிழந்துள்ளனர். 1,06,962 பேர் காயமடைந்துள்ளனர். தற்போது நடந்த தாக்குதலில் 24 மணி நேரத்தில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சூழ்நிலை மாறி அங்குப் போர் முற்றிலுமாக நிறுத்தப்பட ஜெபிப்போம்.

**2.** இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் போர் நிறுத்தப்படவும், ஜனங்களின் பதற்றங்கள் மாறவும் ஜெபிப்போம்.

**3.** காசா முழுவதும் ஏற்பட்டுள்ள பஞ்சம் மாறவும், உணவுகள் தடையின்றி கிடைக்கவும் ஜெபிப்போம்.

**4.** உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் தவித்து வரும் மக்களை அரசு கவனத்தில் கொண்டுவர ஜெபிப்போம்.

**5.** வான்வழி தாக்குதலினால் இறந்துள்ள 79 பேரின் குடும்பங்களின் ஆறுதலுக்காகவும், வான்வழி தாக்குதல்கள் நிறுத்தப்படவும் ஜெபிப்போம்.

**6.** இதுவரை 44 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மரித்துள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தப் போர் முடிவுக்கு வர ஜெபிப்போம்.

**7.** இரு நாடுகளுக்கு இடையே தொடரும் தாக்குதலில் சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களின் பாதுகாப்பிற்காகவும் அந்த மக்களின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**8.** படித்து முடித்து வேலைக்காகக் காத்திருக்கும் வாலிபர்களுக்கு படிப்பிற்கேற்ற வேலைவாய்ப்பு கொடுத்து ஆசீர்வதிக்கும்படி ஜெபிப்போம்.

**9.** வாலிபர்கள் தேவனோடு உள்ள ஐக்கியதிலும் தொடர்பிலும் தரித்திருந்து, ஊழியம் செய்கிறவர்களாக எழும்ப ஜெபிப்போம்.

**10.** எந்தப் பாவங்களும் வாலிபர்களைத் தீட்டுப்படுத்தாதபடி, அவர்கள் பரிசுத்தம் காத்துக்கொள்ள ஜெபிப்போம்.

**11.** பாவத்திலும் சாபத்திலும் சிக்கித்தவிக்கும் வாலிபர்கள் அவைகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**12.** சபைகளில் சரியான சத்தியமும், அன்பும், ஒருமனமும் தேவ ஜனங்கள் மத்தியில் காணப்பட ஜெபிப்போம்.

**13.** தேவ ஊழியர்களுக்கும், தேவ ஜனங்களுக்கும் விரோதமாகக் கிரியை செய்கின்ற எல்லா சத்துருவின் கிரியைகளும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**14.** கர்த்தர் பரிசுத்தராய் இருக்கிறது போல, ஒவ்வொரு தேவ ஊழியர்களும், தேவ ஜனங்களும், கர்த்தருக்குள்ளாய் தங்களை பரிசுத்தப்படுத்தி, ஆயத்தத்தோடு தேவனை ஆராதிக்கும்படியாக ஜெபிப்போம்.

**15.** கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்களித்த தேவன், தம்முடைய அபிஷேகத்தை அளவில்லாமல் ஊற்றும்படியாக ஜெபிப்போம்.

**16.** வாஞ்சையாய் கேட்கிற ஒவ்வொருவர் மீதும் கர்த்தர் அக்கினி அபிஷேகத்தை ஊற்றும்படியாகவும், வரங்களினாலும், கனிகளினாலும் நிரப்பவும், கடைசிக் கால எழுப்புதல் சபைகளில் உண்டாகவும் ஜெபிப்போம்.

**17.** இந்தியாவில் பரவி வரும் தவறான உபதேசங்கள் ஒழிக்கப்படவும், ஜனங்கள் மத்தியில் விழிப்புணர்வு உண்டாகவும் ஜெபிப்போம்.

**18.** உலகளாவிய ரீதியில் 8 லட்சம் பேர் ஆண்டுதோறும் தற்கொலை செய்துகொள்கிறார்கள். ஒவ்வொரு 40 விநாடிகளுக்கும் ஒருவர் தற்கொலை செய்து மரணங்கள் ஏற்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

**19.** விபத்துக்கள் மூலம் நிகழும் மரணங்களைவிட தற்கொலைமூலம் நிகழும் மரணங்களே அதிகம். இந்த தற்கொலையின் ஆவி கட்டப்பட ஜெபிப்போம்.

**20.** குடும்பத்தில் பிரச்சனை, காதலில் பிரச்சனை, மன அழுத்தம், தேர்வில் தோல்வி போன்ற காரணங்களைக் காட்டி தற்கொலை செய்யத் தூண்டும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

**21.** தற்கொலை எண்ணங்களைக் கொண்டுவருகிற பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட்டு, அனைவரும் தேவனுடைய அன்பை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

**22.** இந்தியாவில் சுமார் 35 லட்சம் மக்கள் துணிக்கடைகளில் வேலை செய்கிறார்கள். இதில் 80% பேர் 21 வயது முதல் 25 வயதுடைய பெண்கள். இவர்களின் பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

**23.** அனைத்து தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட ஜெபிப்போம்.

**24.** இந்தியாவில் உள்ள பெரிய தொழிற்சாலைகளிலிருந்து சிறு கடைகள் வரைக்குமுள்ள அனைத்து தொழிற்சாலைகள் மூலமாக இந்தியாவின் பொருளாதாரம் பெருக ஜெபிப்போம்.

**25.** தேசங்களில் வீணாக இரத்தம் சிந்த வைத்து மனித உயிர்களை வீணாக அழிக்க நினைக்கிற பொல்லாத சத்துருவின் கிரியைகளும் திட்டங்களும் நிர்மூலமாக ஜெபிப்போம்.

**26.** யுத்தங்கள், விபத்துகள், இயற்கை சீற்றங்கள் மூலம் ஜனங்களுடைய ரத்தம் பூமியில் சிந்தாதபடி கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

**27.** பொதுத் தேர்வு எழுதப் போகும் மாணவ மாணவியர்களுக்கு தேவன் நல்ல ஞானம் கொடுக்கவும், படிக்கிற பாடங்கள் மனதில் ஆழமாகப் பதியவும் ஜெபிப்போம்.

**28.** தேர்வு நாட்களில் எந்த வியாதியும் பிள்ளைகளைத் தாக்காதபடிக்கு தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.



வரலாறு: சுதர்சன்

# மீண்டும் துளிர்த்த அத்திமரம்



**அன்பான நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! அத்தி மரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அத்திமரம் என்று வேதம் எதனை உவமையாகக் காட்டுகிறது, அதன் மூலமாக முழு உலகிற்கும் வேதம் சொல்லும் செய்தி என்ன என்பதை நாம் தெளிவாக இந்தப் பகுதியில் காண இருக்கிறோம்**

**அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள் (மத். 24:32,33).**

**நண்பர்களே, வேதத்தில் அத்தி மரத்தினால் உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டதில் அத்திமரம் இஸ்ரவேல் தேசத்திற்கு ஒப்பனையாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.**

**நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கீகரிப்பேன் (எரே. 24:5). இந்த வசனத்தின்படி யூதர்கள் அத்திப்பழங்கள் என்றால் இஸ்ரவேல் தேசம் அத்தி மரம் என்று பொருள்படும்.**



## (அத்திமரத்திற்கு) இஸ்ரவேல் தேசத்திற்கு தேவன் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?



- நமது கரத்தில் இருக்கும் வேத புத்தகம் இஸ்ரவேலருக்காகக் கொடுக்கப்பட்டது. (மோசே காலத்தில் பத்து கட்டளைகளாகவும் நியாயப்பிரமாணங்களாகவும் கொடுக்கப்பட்டது. அதுவே வேத புத்தகமாக நமது கரத்தில் உள்ளது)
- வேத புத்தகத்தில்; இஸ்ரவேலரின் வாழ்க்கை வரலாறு, அவர்களுடைய யுத்தங்கள், அவருடைய வீழ்ச்சிகள், அவர்களுடைய ஜெயங்கள், அவர்களுக்குத் தேவன் வாழக் கற்றுக் கொடுத்த வழிமுறைகள், நாகரீகங்கள் முழுவதும் அடங்கியிருக்கிறது. முழு வேத புத்தகத்தில் 90%க்கும் அதிகமாக இஸ்ரவேலரை குறித்தும் இஸ்ரவேலை குறித்தும் சொல்லப்பட்டு இருக்கிறது. இஸ்ரவேல் தேசம் அதாவது அத்திமரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும்.



◀ இதுமட்டுமின்றி, முற்பிதாக்களான, 'ஆபிரகாம்', 'ஈசாக்கு', 'யாக்கோபு' போன்ற தேவ மனிதர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு, அவர்களுடைய சந்ததிக்குச் சுதந்திரமாகக் கொடுக்கப்பட்ட தேசமாகும். மட்டுமல்ல, இந்தத் தேசம் உலகத் தோற்றத்திற்கும், அதன் முடிவுக்கும் அச்சாரமாகத் திகழ்கிறது.

◀ கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலக இரட்சகராக அவதரித்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபின்பு, பரிசுத்த ஆவியானவர் முன்மாரி மழை ஊற்றப்பட்டதும், தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் கொண்டு செல்லப்பட்டதும் இந்தத் தேசத்திலிருந்துதான்.

## தெரிந்து கொள்ளுதல்

◀ ...இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார் (சங். 135:4)

◀ நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்... (யோவான் 15:16)


இந்த வசனங்களின்படி இஸ்ரவேலரை தமது சொந்த ஜனமாகத் தேவனே தெரிந்து கொண்டார். ஆகவே இஸ்ரவேலர்கள் தேவனால் தெரிந்து கொள்ள பட்டவர்கள்.



**ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக (கலா. 3:7)**

**நண்பர்களே! தேவனை விசுவாசிக்கிற நாமும் ஆபிரகாமின் சந்ததியே! நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். நீங்கள் தேவனுக்கு விசேஷமானவர்கள். நீங்கள் கர்த்தருடைய சொந்த ஜனம்.**

**இஸ்ரவேலர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.**
**இஸ்ரவேல் கர்த்தருடைய தேசம்.**
**இஸ்ரவேல் வாக்குத்தத்தின் தேசம்.**
**இஸ்ரவேல் பாலும் தேனும் ஓடுகிற தேசம்.**
**இஸ்ரவேல் நம் இரட்சகர் இயேசுவின் தேசம்.**



அத்திமரம் அதாவது இஸ்ரவேல் தேசம் உலகத்தின் கடிகாரம் என்று சொல்லுவார்கள். அந்த இஸ்ரவேல் தேசம் எப்படி உருவானது, எப்படி அழிந்தது, எப்படி மீண்டும் உருவானது, இனி வரப்போகும் நாட்களில் நடக்கப்போவது என்ன? இதைக் குறித்ததான தகவல்களை வரும் நாட்களில் நாம் காண இருக்கிறோம்.

தகவல்: ஜாய்லின்



# இது இல்ல Trendu...!

## (வார்த்தை)

Hello dear Friends in Christ! இந்தப் புதிய வருடத்தில் ஒரு புதிய article மூலம் உங்களைச் சந்திப்பதில் ரொம்ப சந்தோஷம். Articleஓட titleஅ பார்த்ததும் இது என்னடா புதுசா இருக்குன்னு பாக்கறீங்களா?? ஆமா பிரண்ட்ஸ் இன்னைக்கு நாம் வாழ்ந்து கொண்டிருக்க உலகத்தில் எது பண்ணாலும் trend தான். ஆனால் கிறிஸ்தவ வாலிபர்களாகிய நாம் உலகத்தோடு ஒத்த வேஷம் தரியாமல், உலகத்தவரோடு இசைந்து அவர்கள் வழிகளைக் கற்றுக் கொண்டு அவர்களைப் போல் வாழாமல் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். "புறஜாதிகளுடைய மார்க்கத்தை கற்றுக் கொள்ளாதிருங்கள்" (எரே. 10:2). இதைத்தான் பவுல் இளம் வாலிபனாய் இருந்த தீமோத்தேயுவுக்கு அறிவுரையாக 1 தீமோ. 4ம் அதிகாரம் 12ம் வசனத்தில் கூறுகிறார். "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு." இந்த வசனத்தை மையமாகக் கொண்டு வருகிற மாதங்களில் பல காரியங்களை ஆராயவிருக்கிறோம்.

இந்த வசனத்தில் பவுல் தீமோத்தேயுவிடம் ஆறு காரியங்களை அறிவுறுத்துகிறார். அதாவது கிறிஸ்துவை பின்பற்றுகிற வாலிபர்களாகிய நாம் வார்த்தை, நடக்கை, அன்பு, ஆவி, கற்பு மற்றும் விசுவாசம் ஆகிய காரியங்களில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். விழுந்து போய் இருக்கிற அநேக வாலிபர்கள் நம்முடைய சாட்சியைப் பார்த்து எழ வேண்டுமே தவிர நம் நிமித்தம் இடறி விழக் கூடாது. இம்மாதம் முதலாவதாக நம்முடைய **வார்த்தையில்** மற்றவர்களுக்கு எப்படி முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று அறிந்து கொள்ள கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

பொதுவாக வார்த்தைகளுக்கு power அதிகம் என்று கூறுவார்கள். நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் ''நன்மையான, மற்றவர்களைக் கட்டி எழுப்புகிற, பக்தி விருத்திக்கேதுவான'' வார்த்தைகளாய் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால் நாமோ நாம் பேசும் வார்த்தைகள் சரியா தவறா, பிரயோஜனமற்றதா பிரயோஜனம் உள்ளதா, நன்மையானதா தீமையானதா, தூய்மையானதா அசுத்தமானதா என்று நிதானித்துப் பார்க்காமல் பேசி விடுகிறோம். அதை நம்மைச் சுற்றி உள்ளவர்களும் பேசுவதால் அது நமக்குத் தவறாகத் தெரிவதில்லை. இதுதான் Trendu என்று நினைத்து ஜாலியாகப் பேசிவிடுகிறோம்.


பாருங்கள் இன்றைய காலகட்டத்தில், கெட்ட வார்த்தைகள் publicல் பேசுவது டிரெண்டாகிவிட்டது. வாலிபர்கள் அதை கெத்தாக நினைக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்பெல்லாம் கெட்ட வார்த்தை பேசுவதற்கு அவ்வளவு பயப்படுவோம். அதுவும் privateஆக பேசுவதற்கே பயப்பட்ட காலங்கள் எல்லாம் மாறி இப்போது publicகாக பேசினாலும் எந்தத் தவறும் இல்லை என்ற நிலை வந்துவிட்டது. கேட்டால் இதுதான் trend என்று கூறுகிறார்கள். அன்பு வாலிப தம்பி தங்கச்சி உலகத்தாருக்கு வேண்டுமானால் இது trendஆக இருக்கலாம் ஆனால் பரிசுத்தமுள்ள தேவனை ஆராதிக்கும் நமக்கு ''இது இல்ல trendu'', இது கர்த்தரை துக்கப்படுத்தும் காரியம். **"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்"** (எபே 4:29) என்று வேதம் சொல்லுகிறது.

**அன்பு வாலிபர்களே.! நாம் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைகளுக்கு நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத் 12:36). மெய் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற நாம், பேசும் வார்த்தைகளின் மூலம் அவருக்கு மகிமை சேர்க்க வேண்டுமே தவிர அவர் நாமத்திற்கு களங்கம் உண்டு பண்ண கூடாது. எனவே நம்முடைய வார்த்தைகளில் மிகவும் கவனமாய் இருப்போம் ஏனென்றால் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் பரலோகம் மாத்திரமல்ல பிசாசும் கூட உற்று கவனித்துக் கொண்டிருக்கிறான். எனவே நம்முடைய வார்த்தைகளில் கவனமாயிருந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாயிருப்போம்..!**




தகவல்: எப்சிபா

# கிறிஸ்தவம்



அன்றும்

## Hi சகா



இன்றும்

## Hi சகி

**இந்தப் புதிய வருடத்தில் வருகின்ற மாதங்களில் "கிறிஸ்தவம் அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் சில காரியங்களை நாம் பார்க்கபோகிறோம். அதாவது நம் முன்னோர்கள் மற்றும் ஆதி கிறிஸ்தவர்கள் காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கும் தற்போது இருக்கிற கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் குறித்து சற்று ஆழமாய் தியானிக்க இருக்கிறோம்.**

நம் தேவன் புதிய காரியங்களை, அபூர்வமானவைகளை செய்கிறவர் தான் என்றாலும், பூர்வ பாதைகள் எதுவென்று விசாரித்து அதில் நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டும் இருக்கிறார். அந்த வார்த்தையின்படி சில பூர்வ பாதைகளை ஆராய்ந்து, அதிலே நடப்போம் வாருங்கள்...!

**"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 6:16).**

புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக ''கிறிஸ்து'' என்னும் நாமம் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்து வந்ததற்குப் பின் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ''கிறிஸ்தவர்கள்'' என்றழைக்கப்பட்டார்கள். இது சுமார் கி.பி. 40 ல் நடந்தது. ஆதி முதல் இருக்கிறது ''கிறிஸ்தவம்'' இருந்தாலும் ''கிறிஸ்தவம்'' என்னும் வார்த்தை பயன்பாட்டின் தொடக்கம் அதுவே.

- ***ஆதி கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சியாக மரித்தனர், தேவனுக்காக லாபமான அனைத்தையும் நஷ்டமென்று கருதினர்...***

***இன்று, கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவிற்காக உயிரைக் கொடுக்க வேண்டாம், நேரத்தைக் கொடுக்கலாமே?***

- ***ஆதி கிறிஸ்தவர்கள் தேவ உறவில் பலப்பட்டு, பின்னர் ஊழியம் செய்தனர்.***

இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் தேவ உறவில் பலப்படவே பிரயத்தனப்பட வேண்டியிருக்கிறதே!

ஆதி கிறிஸ்தவர்கள் ஒரு மனப்பட்டு 40 நாட்கள் ஓரிடத்தில் கூடி இருந்தனர்.

இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் CSI, Pentecost, protestant etc... எனப் பல்வேறு பிரிவுகளாய் பிரிந்து கிடக்கிறோமே.

பின்மாரி பெய்ய வேண்டும் என்று ஜெபிக்கிற நாம் தானே முன்மாரி காலத்தில் இருந்த தேவபக்தி கூட இல்லாமல் வாழ்ந்தால் எப்படி?



**எழுப்புதல் விரும்பும் வாலிபர்களே, இயேசுவுக்காய் எழும்பிப் பிரகாசிக்க அர்ப்பணிப்போம்!**

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (2ND FEB.)

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)

World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

### VELLORE (3PM)

World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)

World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)

World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

### TIRUPATI (3PM)

World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (8TH FEB.)

### BANGALORE (3PM-5PM)

Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)

Devanukae Mahimai Church,Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2ND SUNDAY (9TH FEB.)

### SANKARANKOIL (2:30PM – 5PM)

World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)

Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

### THANE (5PM - 7:30PM)

R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

### THANJAVUR (3PM)

World Revival Prayer Centre,Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)

St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)

D. No. 5/2, Vaanjinathan Street,North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)

World Revival Prayer Centre,#203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)

Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SATHANKULAM (3PM -5:30PM)

Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

### CHENGALPET (3PM – 5:30PM

Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

### Namakkal (3PM -5:30PM)

World Revival Prayer Centre,16B Naveen Nest Apartment, Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Grace Auto
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

### VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles, Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

### ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SUNDAY (16TH FEB.)

### TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road, (Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

### COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

### TRICHY (3 PM)
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road, Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

### JEBAMALAI (2 PM)
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

### CHENNAI (3 PM)
World Revival Prayer Centre, Prince Kushal Towers, 7th
Floor B-Wing, Adjacent to LIC Metro, Mount Road,
9488475315

### NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God, Nalumavadi
9442885315

### TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre, 1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

### RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

### NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

### PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

### CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (22ND FEB.)

### PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

## EVERY 4TH SUNDAY (26TH FEB.)

### THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

### KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

### MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

### PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

**ஒவ்வொரு வாரமும் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்;
எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

நிகழ்வு: ஜெயசீலன்

# நான் ஒரு ஜெபவீரன்!!



***கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமான தம்பி, தங்கச்சி....***

உங்கள் அனைவருக்கும் இரட்சகர் இயேசுவின் பெயரில் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு முழுவதும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து, போஷித்து, உடுத்துவித்து, தாங்கி, ஏந்தி, சுமந்து, தப்புவித்து இன்னுமொரு புதிய ஆண்டைக் காணச்செய்த தேவாதி தேவனை மனதாரத் துதிக்கிறேன்.


இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு ஜெபங்களைக் குறித்து இப்பகுதியில் நாம் தியானித்து, அதை நம் வாழ்விலும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கப் போகிறோம்.



## மன்றாட்டு ஜெபம்

நெகேமியா 1:4,6 வசனங்களில் மன்றாடி என்ற ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். மன்றாட்டு என்ற சொல்லுக்கு, **Intercession** என்ற ஆங்கில வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. **Intercession** என்பதற்கு எபிரேய மொழியில் **Paga** என்று பொருள். **Paga** என்றால், பரிந்து பேசுதல் என்பதாகும். அதாவது மற்றொருவருடைய சார்பில் இன்னொருவரிடம் மனமுவந்து வேண்டுதல் செய்வது.

இந்த நெகேமியா புத்தகம் 14 ஜெபங்களை உள்ளடக்கிய ஒரு அழகான புத்தகம். நெகேமியா 1:4ல் ''இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடிப் பரலோகத்தின் தேவனை நோக்கி'' என நெகேமியாவின் அனுபவம் எழுதப்பட்டுள்ளது.



நெகேமியா, பெர்சிய ராஜ்யத்தின் மன்னனான அர்தசஷ்டாவுக்கு திராட்சை ரசம் ஊற்றிக்கொடுக்கும் **(Cup bearer)** வேலை செய்து வந்த அரண்மனை ஊழியர். அரசாங்க வேலை. அதுவும் மன்னனுக்கு அருகிலேயே இருக்கும் ஒரு பாக்கியம். தனக்குக் கிடைத்த நல்ல வேலையைப் பார்த்துக்கொண்டு, சந்தோஷமாய் இருப்பதை விட்டுவிட்டு, சுமார் 4 மாதங்கள் மன்றாட வேண்டிய அவசியம் என்ன? நெகேமியா எதற்காக மன்றாடினார்.

பாபிலோன் மற்றும் பெர்சியாவின் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தாயகமான யூதாவுக்குத் திரும்பிச் சென்ற, தன்னுடைய தேசத்து மக்கள் மிகுந்த வேதனையில் இருப்பதாகவும், எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்பதைத் தன் சகோதரர்களின் மூலம் அறிந்த நெகேமியா, தன் ஜனத்திற்காக, தன் தேசத்திற்காகப் பரலோகத்தின் தேவனிடம் மன்றாடுகிறார்.

அலங்கம் (மதிற்சுவர்) ஒரு நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானது? மதிற்சுவர்தான் எதிரிகள் தேசத்திற்குள் நுழைய முடியாதபடி அவர்களைக் கட்டுப்படுத்துவது. அது இடிபட்டு, அதின் வாசல்கள் சுட்டெரிக்கப்பட்டால் அந்தத் தேசமும், அதில் வாழும் மக்களும் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும். இப்படியொரு நிலையில் தான், நெகேமியா தன் மக்களுக்காகவும், தன் தேசத்திற்காகவும் பரலோக தேவனிடம் மன்றாடி, அந்த இக்கட்டிலிருந்து தன் தேசத்தையும், தன் மக்களையும் காப்பாற்றுவதாக இந்த வேதபகுதி போதிக்கிறது.

இங்கிலாந்தின் வேல்ஸ் தேசத்தில், மதுபான பாவம் பரவத் தொடங்கியது, நடன அரங்குகள் பெருகின, மக்கள் குடித்து வெறித்து, துன்மார்க்கமாய் வாழத் தொடங்கினார்கள். இந்தச் சூழ்நிலையில் இவான் ஜான் ராபட்ஸ் என்ற 15 வயது வாலிபன், பரிசுத்தம் என்ற அலங்கம் இடிபட்டு, இரட்சிப்பு என்ற கதவுகள் சுட்டெரிக்கப்பட்டு, பாவத்தால் நிறைந்திருந்த, தன் தேசத்தின் நிலையைப் பார்த்தார். தேசத்தைக் குறித்த பாரம் அவரை அழுத்தியது. நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்து வந்த வாலிபன் இவான், தன் பணிகளை முடித்து, இரவு 12 மணிக்கு முழுங்கால்படியிட்டு, அதிகாலை 4மணி வரை, என் தேசத்தை விடுவியும், என் தேசத்தைப் பரிசுத்தமாக்கும், என் ஜனத்தை இரட்சியும், எழுப்புதலை என் தேசத்தில் அனுப்பும் என சுமார் 11 வருடங்கள் தன் தேத்திற்காக,தன் ஜனத்தின் பாவத்திற்காக உருக்கமாய் மன்றாடி ஜெபித்தார். கர்த்தர் இந்த வாலிபனின் ஜெபத்தைக் கேட்டு ஜனங்களுக்குள்ளே பாவ உணர்வைக் கட்டளையிட்டார். ஜனங்கள் பாவ உணர்வடைந்து, முகங்குப்புற விழுந்து, கண்ணீர் விட்டு அழுதார்கள். நடைமேடைகளில் மண்டியிட்டு ஒப்புக்கொடுத்தார்கள். மதுபானம் ஒழிந்தது, விபச்சார விடுதிகள், நடன கிளப்புகள், திரையரங்கங்கள் மூடப்பட்டன. இளைஞர்கள் மதுபாட்டில்களை உடைத்தார்கள். தேசம் மறுரூபமானது.



**அன்பு வாலிபப் பிள்ளைகளே! நாமும் பக்தன் நெகேமியாவைப் போல், இவான் ராபட்ஸைப் போல நம் தேசத்திற்காகவும், நம் மக்களுக்காகவும் மன்றாட வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலிருக்கிறோம். 144 கோடி மக்கள் கொண்ட நம்முடைய இந்திய தேசத்தில், சுமார் 42 கோடி வாலிபர்கள் உள்ளனர். ஒரு நாட்டின் எதிர்காலமும், முன்னேற்றமும் இளைஞர்களின் கையில் தான் இருக்கிறது; ஆனால் நம் தேசத்திற்கு அரண்போல் இருந்து பாதுகாக்க வேண்டிய இளைஞர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். கெட்ட பழக்க வழக்கங்கள், முறையற்ற தவறான உறவுகள், டீ, காபி பருகுவது போல மதுபானத்தைப் பயன்படுத்துதல், போதைக்கலாச்சாரம், காதல் மயக்கம், மொபைல் போனில் எப்போதும் மூழ்கிக்கிடப்பது, ஆபாச உடை, ஆடம்பரம் என இளைய சமுதாயம் ஆண், பெண் எனப் பாரபட்சமின்றி பாவத்தில் அழிந்து கொண்டிருக்கிறது. இளைய சமுதாயம் ஒருபுறமென்றால் வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாக வாழவேண்டிய பெரியவர்களும் இளைஞர்களோடு போட்டி போட்டுக்கொண்டு சீர்கேடான பாதையில் முன்னேறுவதைக் காணமுடிகிறது. தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான் (நீதி. 25:28) என்று வேதம் சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்களுக்காகப் பரலோக தேவனிடம் மன்றாட நெகேமியா மற்றும் இவானைப் போலப் பாரம் கொண்ட, வாலிபர்கள் எழும்ப வேண்டிய காலமிது.**

*இளைய சமுதாயமே, விழித்துக்கொள்...! ஒரு நெகேமியா மன்றாடினார்; அலங்கம் கட்டப்பட்டது. ஒரு இவான் ஜான் ராபட்ஸ் மன்றாடினார்; தேசம் பரிசுத்தமானது. வாலிபத் தம்பி, தங்கச்சி... இன்று தேசத்துக்காக மன்றாட, ஒரு நெகேமியாவாக, இவான் ராபட்ஸ் ஆக எழும்ப உன்னை ஒப்புக் கொடுப்பாயா?*

# Revival IGNiTERS 2024 4 Gen Camp

## எழுப்புதலை பரவச் செய்வோர், 4 தலைமுறை புத்துணர்ச்சி முகாம்



கர்த்தர் தமது சகோதரர் அவர்களுக்கு தரிசனமாய் சொன்ன வார்த்தையின்படியே கடந்த 2021ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கு மட்டும் 4 பிரிவுகளாக நடைபெற்ற எழுப்புதலைப் பற்ற வைப்போர் முகாமில் சுமார் 5000 வாலிபர்கள் கலந்துகொண்டார்கள். 7 விதமான யௌவன சந்ததி எழும்பும் என்ற தீர்க்கதரிசனத்தின் படியே தேவன் எழுப்பினார். இந்த 7 விதமான யௌவன சந்ததியையும் கடந்த 2024 டிசம்பர் மாதம் 13,14,15 ஆகிய 3 நாட்கள் 4 சந்ததி (சுவிசேஷ சந்ததி, யுத்த சந்ததி, தீர்க்கதரிசன சந்ததி, பலவானின் சந்ததி) வரவழைக்கப்பட்டதில் சுமார் 700 பேர் கலந்துகொண்டு, வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பி புதிய அபிஷேகத்தை பெற்றுச் சென்றனர். சகோதரர் மோகன் சி. லாசரஸ், சகோதரர் வின்சென்ட் செல்வகுமார், சகோதரர் சாம் ஜெபராஜ் ஆகிய ஊழியர்களை கொண்டு தேவன் மகிமையான காரியங்களை செய்தார். தேவனுக்கே மகிமை !






















# செய்திகள் !

## நாடு முழுவதும் 43 லட்சம் செக் மோசடி வழக்குகள் நிலுவை..!



நாடு முழுவதும் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் 43 லட்சம் செக்-பவுன்ஸ் வழக்குகள் நிலுவையில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி நிலவரப்படி நாடு தழுவிய அளவில் பல்வேறு நீதிமன்றங்களில் 43 லட்சம் செக்-பவுன்ஸ் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில், 6.4 லட்சம் வழக்குகளுடன் ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, குஜராத், டெல்லி, உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

இந்தியா முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையில் வழக்குகள் தேங்குவதற்கு ட்ராபிக் சலான்கள் மற்றும் செக்-பவுன்ஸ் வழக்குகள் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இதனால், டிராபிக் சலான் வழக்குகள் மெய்நிகர் நீதிமன்றங்கள் மூலமாக தீர்வு காணும் நடைமுறையை அரசு தொடங்கியுள்ளது. இருப்பினும், செக்-பவுன்ஸ் வழக்குகள் வழக்கமான நீதிமன்ற அமர்வுகளில் சாட்சியப் பதிவு மற்றும் சம்பந்தப்பட்ட குற்றவியல் வழக்குகளின் தன்மையைக் கொண்டு தீர்க்கப்படுகின்றன.

விசாரணை கண்காணிப்பில் குறைபாடு, அடிக்கடி வழக்குகள் ஒத்திவைக்கப்படுவது, கால வரம்பு நிர்ணயிக்கப்படாதது ஆகியவற்றின் காரணமாக செக்-பவுன்ஸ் வழக்குகளில் தீர்வு காண்பதற்கு மிகவும் தாமதம் ஏற்படுகிறது.

இவைதவிர, பிரத்யேக உள்கட்டமைப்பு, போதுமான நீதிமன்ற ஊழியர்கள் இல்லாதது மற்றும் சம்பந்தப்பட்ட உண்மைகளின் சிக்கலான தன்மை உள்ளிட்டவற்றாலும் நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் தேக்கமடைந்துள்ளன.

**- இந்து தமிழ் திசை, 29 டிசம்பர்**

## 2025ம் ஆண்டில் பொருளாதாரம் மேம்படும்: ரிசர்வ் வங்கி தகவல்

ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா நிதி நிலைத்தன்மை அறிக்கையை நேற்று வெளியிட்டு பேசுகையில், "தொழில் துறையினர் தங்களின் தொழில் வளர்ச்சி மீது நம்பிக்கை கொண்டிருப்பதாலும், அதிக நுகர்வோரை நாடு கொண்டிருப்பதாலும் 2025ம் ஆண்டில் பொருளாதாரம் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய நிச்சயமற்ற நிலை காரணமாக 2024-25ம் நிதியாண்டின் முதல் பாதியில் இந்திய பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தமாக இருந்தாலும், 2ம் பாதியில் அது வேகமெடுக்கும்" என்றார்.

நடப்பு நிதியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வங்கிகளில் வராக்கடன் 2.6 சதவீதமாக சரிந்திருப்பதாக ரிசர்வ் வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- தினகரன், டிசம்பர் 31**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# பொதுத் தேர்விற்கு தயாராவது எப்படி?

**பொதுத் தேர்விற்கு தங்களை தயார்படுத்தி வரும் மாணவர்கள் விரைவாகவும், எளிமையாகவும் புரிந்துகொள்ளும் வகையில் தேர்வில் கடைப்பிடிக்க வேண்டியவை:**

## நேர மேலாண்மை

பாடங்களை விரைவாகப் படிக்க வேண்டுமானால், மாணவர்கள் நேர மேலாண்மையில் கவனம் செலுத்த வேண்டும். காலையில் எழுந்திருப்பது முதல் இரவு தூங்குவது வரை ஒரு நேர அடிப்படையில் கவனம் செலுத்திப் படிப்பது சிறந்த முறையாகும். பள்ளிக்குச் செல்வது, உணவு, படிக்கும் நேரம் என்று மட்டுமில்லாமல் உடற்பயிற்சிக்கும் நேரம் ஒதுக்குவது அவசியம்.

## சமூக ஊடகங்களிலிருந்து விலகி இருத்தல்

உங்களுடைய அதிக நேரத்தை எடுத்துகொள்ளும் வலிமை சமூக ஊடகங்களுக்கு உள்ளது. மாணவர்கள் அதிக நேரம் சமூக ஊடகங்களில் இருப்பதை தவிர்க்க வேண்டும். இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்ற வற்றில் பொழுதுபோக்கிற்கு செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமான ஒன்று. அதிக நேரம் சமூக ஊடகங்களில் செலவிடுவது தேர்வு நேரத்தில் கவனச் சிதறலை ஏற்படுத்தக்கூடும்.

## உடற்பயிற்சி

தினசரி காலை அல்லது மாலை உடற்பயிற்சி செய்ய வேண்டும். மிகக் கடினமான உடற்பயிற்சி அல்லாது சிறிய அளவிலான மூச்சுப் பயிற்சி, நடை பயிற்சி ஆகியவற்றை செய்யலாம். தொடர்ந்து படித்துக்கொண்டு இருக்காமல் சிறிய இடைவெளிக் கொடுத்து அமைதியாக இருப்பது மனதை சாந்தப்படுத்த உதவும்.

## மனப்பாடம் செய்வதை தவிர்க்கவும்

படிக்கும் மாணவர்கள் எந்தச் சூழ்நிலையில் படிக்கிறார்கள் என்பது முக்கியமானது. மனப்பாடம் செய்வதை தவிர்ந்து, பாடத்தைப் புரிந்து படிக்கவும். தொடக்கத்திலிருந்தே விரைவாகப் படிக்காமல், கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கலாம். அமைதியான சூழலில் நிதானமாகப் படித்தால் எளிதாகப் படிக்கலாம்.

## அட்டவணை போட்டுப் படித்தல்

உங்களுக்கு எளிதாக இருக்கும் பாடங்கள், கடினமாக இருக்கும் பாடங்கள் எனப் பிரித்துச் சில மணி நேரம் எளிமையான பாடங்களையும், சில மணி நேரங்கள் கடினமான பாடங்கள் என வகைப்படுத்தி படிக்கும்போது சோர்வை தவிர்க்கலாம்.

## தினசரி பள்ளியில் படிக்கும் பாடங்களை அன்றே முடிப்பது சிறந்தது

இறுதி நேரத்தில் மொத்தமாகப் படிப்பது அதிக கடினமாக மாறிவிடும். எனவே அன்றைய பாடத்தை அன்றே படித்து முடிக்க வேண்டும். அதே நேரம், முந்தைய நாள் படித்தவை எவ்வளவு புரிந்தது என்பதை ஒரு சிறிய தேர்வு வைத்துச் சரிபடுத்திக்கொள்ள வேண்டும்.

## முந்தைய ஆண்டு வினாத்தாள்

எப்போதும் முதலில் புத்தகத்தை முழுமையாகப் படித்து முடிப்பது சிறந்தது. புத்தகங்களிலிருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்படும். அதனைத் தொடர்ந்து, முந்தைய ஆண்டு வினாத்தாள்களை வைத்துத் தேர்வு எழுதிப் பார்ப்பது ஒரு சிறப்பான முன்னேற்றமாக இருக்கும். அதில் நீங்கள் செய்யும் தவறுகளைச் சரிபார்க்கும்போது மீண்டும் அதனைச் செய்யாமல் இருக்கலாம்.

## பாட வாரியாகத் தேர்வு

வாரத்திற்கு ஒரு முறை படித்த பாடங்களை நீங்களே ஒரு தேர்வு வைத்து எழுதுவது நல்லது. தேர்வு நேர அச்சத்தை குறைக்கவும் இது உதவும்.

## இறுதி நேரத்தில் கடைபிடிக்க வேண்டியவை

புத்தகங்களைத் தாண்டி எதும் கேட்கப்பட போவதில்லை. நிதானமாக யோசித்து தெரிந்த விடைகளை எழுத வேண்டும். சரியான நேரத்திற்கு தூங்குவது, முறையான உணவு எடுத்துக்கொள்ளுவது, உடற்பயிற்சி, மனநிலையை சமப்படுத்துவது போன்ற சிறிய சிறிய காரியங்கள் கண்டிப்பாக உங்களுக்கு இறுதி நேரத்தில் கைக்கொடுக்கும்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 01 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.


# Achievers 2025

தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

**கோவை மாவட்டம் - அன்னூரில்...**

நாள்: **பிப்ரவரி 9** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: CSI சபா மண்டபம், அம்பால் பெட்ரோல் பங்க் அருகில், சத்தி ரோடு அன்னூர்.
தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு : 99944 14424 I 86082 82082

**சென்னையில்...**

நாள்: **பிப்ரவரி 16** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:30 - 6:30
இடம்: : உலக எழுப்புதல் ஜெப மையம், பிரின்ஸ் குஷால் டவர்ஸ், 7வது மாடி, B -Wing, மவுண்ட் ரோடு
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு: 94884 75315 I 044-4501 6562

**சித்தூரில்...**

நாள்: **பிப்ரவரி 16** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: St. Luke Telugu Church , Near BV Reddy Colony , சித்தூர்.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 94877 34603

**திருச்சியில்...**

நாள்: **பிப்ரவரி 23** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:00 - 6:00
இடம்: YMCA Hall, Opp. to GH, Trichy
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு: 94897 75075

**கடலூரில்...**

நாள்: **பிப்ரவரி 23** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:00 - 6:00
இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், மணிக்கூண்டு எதிரில், மஞ்சக் குப்பம்.
தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு: 99651 44000

**புத்தூரில்...**

நாள்: **பிப்ரவரி 23** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 6:00 - இரவு 9:00
இடம்: Good Shepheard Compound, Puthur.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு: 88867 39633